புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • மார்ச் 07, 2025 • புரட்சி 25 • முழக்கம் 08 • விலை ரூ.3.00

# பெரியாரை சீண்டும் ஆளுநருக்குப் பதிலடி

## ஆரியர்–திராவிடர் கற்பனையா?

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என் ரவி பிராமண சங்கத்தின் தலைவராக இப்போது “அவதாரம்” எடுத்து நேரடியாகப் பெரியாரைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டார். ஆரியரைப் பற்றி தவறான கருத்தை பெரியார் பரப்பினாராம் ஆரியர்–திராவிடர் வெவ்வேறு இனம் என்றும் ஆரியர் இந்தியாவுக்கு படையெடுத்து வந்தனர் என்றும் கடந்த 60 ஆண்டுகளாக திராவிட சித்தாந்தம் பேசுவோர் கற்பனைக் கதையை உருவாக்கிப் பரப்புகிறார்.**

**ஆரியர் வந்தேறிகள் என்று ஈ.வெ ராமசாமி கருத்துத் திணிப்பு செய்தார் என்றும் வாய்க் கொழுப்புடன் பேசி உள்ளார். இந்த உளறல்களை கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. பிகாரில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஆளுநரே உமக்கு வரலாறு ஏதாவது தெரியுமா?**

*1. பார்ப்பனர்களே தங்களை ஆரியர்கள் என்று பெருமையுடன் அறிவித்துக் கொண்ட கதை தெரியுமா?*

*அவர்கள் ஆரிய சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டார்களே அது உமக்குத் தெரியுமா?*

*அதன் நிறுவனர் தயானந்த சரசுவதி ஆரியர்களாகிய வேதமும் சமஸ்கிருதமும் இரண்டு கண்கள் என்று அறிவித்தது தெரியுமா?*

*ஆரியர்களாகிய நாம் வேதக் காலத்துக்கு திரும்ப வேண்டும் அறைகூவல் விடுத்தது தெரியுமா?*

*2. 1875-ல் பிரம்ம ஞான சபை(தியாசபிக்கல் சோசைடிட்டி) என்ற அமைப்பை கர்னல் ஒல்கட் என்ற வெளிநாட்டுக்காரர் தொடங்கியது தெரியுமா?*

*அதில் பார்ப்பனர்கள் அணிவகுத்தது தெரியுமா?*

*அந்த சபையில் இருந்த பிராமணர்கள் ஆரிய வர்த்தத்தை சேர்ந்தவர்கள் என்று அறிவித்துக் கொண்டது தெரியுமா?*

*ஆரியர் ஆதி சங்கரை தென்னாட்டில் பிறந்ததற்காக “***திராவிட சிசு***“ என்று பார்ப்பனர்கள் பெருமை கொண்டாடினார்களே அது எந்த அடிப்படையில்?*

**நாங்கள் ஆரியர்கள் என்று கோல்வவாக்கரே கூறுகிறார்!**

*ஆளுநரின் தாய் சபையான ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு கருத்தியலை உருவாக்கிய கோல்வாக்கரே நாங்கள் ஆரியர்கள் என்று அறிவித்துள்ளார். ஆரிய இட்லர் சொன்ன அதே கருத்தை, ஆரிய கோல்வாக்கரும் கூறுகிறார்.நம்முடைய மக்களின் மூலாதாரம் எது என்பது சரித்திர மேதைகளுக்கே தெரியவில்லை. ஒரு வழியில் நாம் அநாதிகள்; துவக்கம் இல்லாதவர்கள்; பெயர் இல்லாமல் வாழ்ந்திருக்கிறோம். நாம் நல்லவர்கள். நாம் அறிவுத்திறம் கொண்டவர்கள். இயற்கையின் விதிகளை அறிந்தவர்கள் நாம்தான். ஆன்மாவின் விதிகளை அறிந்தவர்களும் நாம்தான். மனிதனுக்கு எவை எவை நன்மை பயக்குமோ, அவற்றை எல்லாம், மனித சமூகம் நன்மை பெறுவதற்காக வாழ்க்கைக்குக் கொண்டு வந்தது நாம்தான்! அப்போது நம்மைத்தவிர, மற்றவர்கள் எல்லாம் இரண்டு கால் பிராணிகளாகத்தான் அறிவற்றவர்களாகவே இருந்தனர். எனவே தனிமைப்படுத்தி நமக்குப் பெயர் எதையும் அவர்கள் சூட்டவில்லை. சில நேரங்களில் - நமது மக்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட நாம் ஆரியர்கள் அதாவது அறிவுத் திறம் மிக்கவர்கள் என்று அழைக்கப்பட்டோம். நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மிலேச்சர்கள்.(ஆதாரம் Bunch of Thoughts).*

*இது ஆரிய-திராவிட பார்வை தானே!*

**ஆரியர்கள் அந்நியர்கள் வந்தேறிகள் என்று வரலாற்றுத் ஆய்வாளர்கள் கூறிய கருத்தை இதோ பட்டியலிடுகிறோம்.**

*“தென்னிந்தியாவில் வசித்து வந்த ஆரியரல்லாதார்களையே குரங்குகள் என்றும், அசுரர்கள் என்றும் இராமாயணக்கதையில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது.”* **(-ரோமேஷ் சந்திர தத்தர் C .L.E.,I.C.S., எழுதிய ‘புராதன இந்தியா’ 52 ஆவது பக்கம்).**

*“திராவிடர்கள் தங்கள்மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும்போர் புரிய வேண்டியிருந்தது”. இந்த விஷயம் ரிக் வேதத்திலேயே அநேக சுலோகங்களாக இருக்கின்றன.* **-(டாக்டர் ரோமேஷ் சந்திர மஜூம்தார் M.A., யின் ‘பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரிகமும் 22 ஆவது பக்கம்).**

*“ஆரியன் என்கிற பதம் இந்தியாவின் புராதனக் குடிமக்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக ஆரியர் ஏற்படுத்திக் கொண்ட பதம்”.*



.

*“தஸ்யூக்கள் என்பது இந்தியப் புராதனக் குடி மக்களுக்கு அவர்கள் (ஆரியர்கள்) கொடுத்த பெயராகும்.”*

**-(1922 ஆம் வருடம் பிரசுரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் ‘பழைய இந்தியாவின் சரித்திரம்’ புத்தகம்).**

*ஆரியரல்லாதவர்களை ரிக் வேதத்தில் தாசர் (சூத்திரர்)கள் என்றும், தஸ்யூக்கள், அசுரர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் இருந்துகொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக்வேதத்தில் பல இடங்களில் காணலாம். “இரு வகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும் அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைக்குக் காரணமாகும்.”* **– (டாக்டர் ராதாகுமுத முக்கர்ஜி எம்.ஏ, பி.எச்டி. எழுதிய, ‘இந்து நாகரிகம்’ புத்தகத்தில் 62 ஆவது பக்கம்).**

*“தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென்கிழக்கிலும், இலங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியரல்லாத திராவிட மக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியாளர்களால் பேசப்படும் பாஷை”* **-(சர் ஜேம்ஸ்மர்ரே எழுதிய இங்கிலீஷ் அகராதியின் பக்கம்).**

*“ஆரியர்கள் தங்கள் மொழியை ஆரியரல்லாதாருக்குள் புகுத்த முயற்சித்து, முடியாமல் போனதால், ஆரியரல்லாதாருடைய பாஷைகளைக் கற்றுக் கொண்டு, அவர்களது நாகரிகத்தையும் பின்பற்ற வேண்டி வந்தன”* **-(பண்டர்காரின் கட்டுரைகள் வால்யூம் -3 பக்கம் 100).**

*“தமிழர்கள், ஆரியர்களை வடவர், வடநாட்டார் என்று அழைத்தார்கள், ஏனெனில், ஆரியர்கள் வடக்கே இருந்து வந்தார்களானதால்”*

**-(டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார், எம்.ஏ. பி.எச்.டி, அவர்கள் எழுதிய ‘தென்னிந்தியாவும் ‘இந்தியக் கலையும்’ என்ற புத்தகத்தில் 3 ஆவது பக்கம்).**

*“இராமாயணத்தில் தென்னிந்தியா (திராவிட தேசம்) தஸ்யூக்கள் என்ற ராட்சதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.*

*இவர்கள் (தென் இந்தியர்கள்) வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களைப் போலவே நாகரிகம் அடைந்தவர்களாய் இருந்தார்கள்.”* **-(பிடிசீனிவாச அய்யங்கார் எழுதிய ‘இந்திய சரித்திரம், முதல் பாகம்’ புத்தகத்தில் 10ஆவது பக்கம்).**

*ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களை, தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்கள் - தஸ்யூக்கள் என்றும், தானவர்கள் என்றும், ராட்சதர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

*“ஆரியக் கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில், ஆரியர்கள் திராவிடர் நாட்டில் சிறுகச் சிறுக நுழைந்து, ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்.”* **-(C.S. சீனிவாசாச்சாரி, M.A.,M.S., ராமசாமி அய்யங்கார் M.A., ஆகிய சரித்திரப் போதகர்கள் எழுதிய, ‘இந்திய சரித்திரம், முதல் பாகம்’ என்னும்**

தொடர்ச்சி 2–ம் பக்கம்

## தலையங்கம்

# தமிழ்நாடு அரசுக்குத் துணைநிற்போம்!

*2026-ஆம் ஆண்டில் மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைக்க ஒன்றிய பாஜக அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. வழக்கம்போல தமிழ்நாடுதான் இதன் ஆபத்துகளையும் முதலில் உணர்ந்து அதுகுறித்த ஓர் எச்சரிக்கையை எழுப்பியிருக்கிறது. குறிப்பாகத் தொகுதி மறுவரையறைசெய்யப்பட்டால்தென்னிந்தியாவிற்கும்தமிழ்நாட்டிற்கும் ஏற்படப்போகும் இழப்புகள் என்ன என்பதை சுட்டிக்காட்டி, மிகுந்த விழிப்புணர்வோடு அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்டியது தமிழ்நாடு அரசு. ஆனால் தொகுதி மறுவரையறை தொடர்பாக இதுவரை ஒன்றிய அரசு எந்த அறிவிப்பும் செய்யவில்லையே! திமுக அரசு வேண்டுமென்றே அரசியல் நோக்கங்களுக்கு இவ்விவகாரத்தை கையிலெடுத்திருப்பதாக பாஜக குற்றம்சாட்டுகிறது.*

*ஒவ்வொரு பத்தாண்டுக்கு ஒருமுறையும் மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு பிறகு, அதற்கேற்பத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட வேண்டும். இதற்காக 1952-ஆம் ஆண்டில் தொகுதி மறுவரையறை சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி அமைக்கப்பட்ட ஆணையங்கள் 1971 வரை 3 முறை மக்களவைத் தொகுதிகளை சீரமைத்துள்ளன. தற்போதிருக்கும் 543 மக்களவைத் தொகுதிகள் என்பது அப்போது இறுதி செய்யப்பட்டதுதான். ஆனால் அதன்பிறகு நெருக்கடி நிலை காலத்தில், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திவிட்டு, பிறகு மறுவரையறை செய்யலாம் என அன்றைய பிரதமர் இந்திராகாந்தி முடிவெடுத்து, 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுவரையறை திட்டத்தை தள்ளிப்போட்டார்.*

*மீண்டும் 2001-இல் வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் இப்பிரச்னை எழுந்தபோதும், மக்கள்தொகை உயர்வு சீரற்று இருப்பதைக் கருத்தில்கொண்டு, 2026 வரை இம்முடிவை ஒத்திவைத்தனர். தற்போது 2021-இல் மக்கள்தொகை கணக்கெடுப்பு செய்திருந்தால், அடுத்து 2031-இல் மக்கள்தொகை கணக்கெடுக்கப்பட்ட பிறகே தொகுதி மறுவரையறை செய்ய முடியும். அதனால்தான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பையே நடத்தாமல் தாமதித்துக்கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. புதிய நாடாளுமன்றம் கட்டும்போதே மக்களவையில் 888 இருக்கைகளும், மாநிலங்களவையில் 384 இருக்கைகளும் என மிக அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டது.*

*தெலுங்கானாவில் நடந்த தேர்தல் பரப்புரையிலும், நாடாளுமன்றத் திறப்பு விழாவிலும் தொகுதி மறுவரையறை பற்றி நரேந்திர மோடி பேசினார். விகிதாச்சார அடிப்படையில் மறுவரையறை செய்யப்படும் என்று அமித்ஷாவும் கூறிவிட்டார். மக்கள்தொகையை அதிகரிக்காமல் தொகுதிகளின் எல்லையை மட்டும் மறுவரையறை செய்தால் தமிழ்நாட்டின் தொகுதிகள் எண்ணிக்கை 39-இல் இருந்து 31-ஆகக் குறையும். ஒட்டுமொத்த தென்மாநிலங்களில் தற்போது உள்ள 129 தொகுதிகளின் எண்ணிக்கை 103-ஆகக் குறையும். ஆனால் உ.பி.யில் 80-இல் இருந்து 87-ஆகவும், பிகாரில் 40-இல் இருந்து 43 ஆகவும், ராஜஸ்தானில் 25-இல் இருந்து 29-ஆகவும் அதிகரிக்கும்.*

*மக்கள் தொகை அடிப்படையில் மறுவரையறை செய்யப்பட்டால் தமிழ்நாட்டிற்கு 10 தொகுதிகளும், ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கும் 35 தொகுதிகளும் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் பீகார், உ.பி., ம.பி., ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களுக்கு மட்டும் 150 தொகுதிகள் கூடுதலாகக் கிடைக்கும். ஆகையினால் இந்த 2 வழிகளிலும் எப்படி தொகுதி மறுவரையறை செய்யப்பட்டாலும் ஒட்டுமொத்த தென்னிந்தியாவின் குரல் நாடாளுமன்றத்தில் நசுக்கப்படும். தென்னிந்தியாவின் தயவே இல்லாமல், பாஜக தனது சித்தாந்தத்தைத் திணிக்கிற சட்டங்களை துணிந்து இயற்றும். எதிர்ப்புக்குரலைக் கூட பதிவு செய்ய முடியாமல் பலவீனமாக்காப்படுவோம்.*

*எனவே தமிழ்நாட்டின் தற்போதைய பிரநிதித்துவமான 7.2% என்பது குறையாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வோடு தமிழ்நாடு அரசு அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்டியது பாராட்டத்தக்கது.இது தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் பிரச்னை அல்ல,தமிழர்களின் நாடாளுமன்ற பிரநிதித்துவத்தை தக்கவைப்பதற்கான ஒரு சவால். இதில் கூட தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி அரசியல் செய்து, அனைத்துக்கட்சிக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளது. அந்த கூட்டணியில் இருக்கும் தமாகா, புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சிஆகிய கட்சிகள் புறக்கணித்துள்ளன. தமிழர்களின் நலனுக்கு ஒரே அத்தாரிட்டி நாங்கள்தான் என்பதுபோல மூச்சடைக்க பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடும் நாம் தமிழர் கட்சி, தமிழ்நாட்டுக்கு வர இருக்கும் இந்த பேராபத்து குறித்துப் பேச விடுக்கப்பட்ட அழைப்பைப் புறக்கணித்துவிட்டது.*

*சங்கிகளின் நண்பர்கள்தான் இந்த ‘நாம் தமிழர்’ என்பதை இதிலும் நிரூபித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எதிரானவர்கள் இவர்கள் என்பதை இதன்மூலம் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதே கூட்டம்தான் பெரியாரை தமிழ், தமிழர் நலனுக்கு எதிரானவர் என சித்தரிக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தை வடநாட்டார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுவார்கள், அப்போது நமது உரிமைகள் பறிபோய்விடும் என்று, தான் வாழ்ந்த காலத்திலேயே எச்சரித்தவர் பெரியார். அதைத்தான் இப்போது பாஜக அரசு முயற்சித்துக்கொண்டிருக்கிறது. அதை முறியடித்து, தமிழ்நாட்டின் பிரநிதித்துவத்தை காக்க திராவிட மாடல் அரசும், நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் துணைநிற்போம்!*

## இந்தியாவின் சிறந்த மாடல் திராவிட மாடல்

*கல்வியாக இருக்கட்டும் தனிநபர் வருமானமாக இருக்கட்டும் ஊட்டச்சத்து குறைபாடாக இருக்கட்டும் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கும் மக்களின் எண்ணிக்கையாகஇருக்கட்டும்எந்தஒருஅளவுகோலிலும் தெற்கிற்கும் வடக்கிற்கும் பாரதூர வேறுபாடு இருக்கிறது.*

*கல்வியின் மூலம் சர்வதேச நிறுவனங்களில் பணிபுரியும் வகையில் சிறப்பான மாணவர்களை தமிழ்நாடு உருவாக்கி இருக்கிறது இந்தியாவுக்கு என்று ஒரு மாடல் இருக்க முடியும் என்றால் அது தமிழ்நாடு மாடலாக மட்டுமே இருக்க முடியும். -**தி வயர் இணையதள நேர்காணலில் கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசியல் சமூகவியல் பற்றி வகுப்பெடுக்கும் பேராசிரியர் கிறிஸ்டோப் ஜெபர்லோ கருத்து.***

## இளமதி ஜேசன் ஜாதி மத மறுப்பு மணவிழா



*கழக ஆதரவாளர் எம்.ஜி இளங்கோவன் - மாலதி ஆகியோரின் மகள் இ.மா.இளமதி பி.ஜேசன் ஆகியோர் ஜாதி மத மறுப்பு மணவிழா 8.02.2025 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சென்னை ஈஞ்சம்பாக்கம் அக்கரையில் உள்ள ஜெனராஜன் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மணவிழாவை நடத்தி வைத்தார். கீழ்கண்ட உறுதிமொழி ஏற்கப்பட்டது.*

**இன்று முதல் நாங்கள் வாழ்க்கை துணைவர்களாக குடும்ப வாழ்வில் நுழைகிறோம்.சம உரிமையும் தோழமையும் அன்பும் கொண்டதே குடும்பம் என்றக் கொள்கை வழியில் பயணிக்க உறுதி ஏற்கிறோம்.**

**வாழ்வில் சந்திக்கும் அனைத்து நிகழ்வுகளையும் சமமாக பகிர்ந்து கொண்டு இணையர்களாவும், தோழர்களாகவும் அறிவியல் நெறியில் சமூக அக்கறையோடு வாழ்ந்து காட்டுவோம் என்று உறுதி ஏற்கிறோம்.**

*என்று உறுதி ஏற்றனர். மண விழா மகிழ்வாக இணையர்கள் கழக வளர்ச்சிக்கு ரூ.5000 நன்கொடை வழங்கினர்*

முதல் பக்க தொடர்ச்சி

***-(H.G வெல்ஸ் எழுதிய உலகத்தின் சிறு சரித்திரம் புத்தகம் 105வது பக்கம்).***

*“வட இந்தியாவில் இருந்த திராவிடக்கலை, நாகரிகம் முதலியவை யாவும்ஆரியர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால்,தென்னிந்தியாவில் அவ்விதம் நடக்கவில்லை.”* ***-(தமிழ்ப் பேராசிரியர் K.N. சிவராஜபிள்ளை B.A., எழுதிய ‘பண்டைத் தமிழர்களின்வரலாறு’என்னும் புத்தகம் 4 ஆம் பக்கம்).*** *ஆரியரல்லாத இந்த நாட்டுப் பழங்குடிமக்கள் ஆரியர்களால் காடுகளுக்குத் துரத்தப்பட்டார்கள். இதுவும் போதாதென்று அவர்களை இராட்சதர்கள், அசுரர்கள் என்றும், ஆரியர்களும் ஆரியப்புரோகிதர்களும் நூல் எழுதி வைத்தார்கள். ஆரியரல்லாதார்களுக்கு இவர்கள் ஆதியில் இட்ட தஸ்யூக், ஆரிய எதிரி என்ற பெயர்கள் தான் நாளடைவில் பிசாசு, பூதம், ராட்சதன் என்ற பெயர்களாக மாறிவிட்டன.”* ***-(சர் வில்லியம் வில்சன்ஹண்டர் K.C.S.I.,C.I.E.,M.A., L.L.D. எழுதிய ‘இந்திய மக்களின் சரித்திரம்’ என்னும் நூலின் 41 ஆவது பக்கம்).***

*இராமாயணமும், மகாபாரதமும் இந்தோ - ஆரியர் காலத்தையும், அவர்களுடைய வெற்றிகளையும், உள்நாட்டுச் சண்டைகளையும் பற்றிக் கூறுவதாகும். இவைகள் உண்மையென்று நான் நம்பவேயில்லை. “பஞ்சதந்திரம்”, “அராபியன் நைட்” முதலிய கற்பனைக் கதைகளைப் போன்றவை என்பதே என் கருத்து.”* ***-(பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் எழுதியுள்ள “டிஸ்கவரி ஆஃப் இந்தியா” (Discove-rey of India) பக்கம் 76-77).***

# தமிழை அறிவியல் பார்வையில் அணுகினார் பெரியார்!

## கொளத்தூர் மணி

***(பிப்ரவரி 1-ஆம் தேதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள விஜய் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிமிர்வோம் வாசகர் வட்ட 28-வது சந்திப்பு நிகழ்ச்சியில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை)***

பெரியார் தமிழ்மீது ஆர்வம் இல்லாதவராக இருந்தால் திருக்குறள் மீது அக்கறை இல்லாதவராக இருந்தால் ஒரு மாநாடு நடத்தி தீர்மானம் போடுவரா, அந்த தீர்மானத்தைத் ஒட்டி தொண்டர்கள் உரை எழுதுவார்களா...

### பெரியாரின் தமிழறிவு

இப்படிப் பல செய்திகள் சொல்லிக்கொண்டே போகலாம். பெரியார், திராவிடர் இயக்க தொண்டர்கள் தமிழுக்கு செய்த நன்மைகள் ஏராளம். இன்னொரு செய்தி சொற்களைத் தமிழ்ப்படுத்துவதற்கு அரசே ஒரு குழு அமைக்கிறது. கலைச்சொற்களைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்ற ஒரு முயற்சி நடந்தது. "ஹைட்ரஜன்" என்பதை "ஆப்ஜனகம்" என்று தமிழில் மொழிபெயர்க்கிறார்கள். *Disinfectant* என்பதற்கு பூதி நாசினி என்று போடுகிறார்கள்.

இதற்கு பதிலடியாக பெரியார் பேசுகிறார் நான் தமிழ்ச்சங்கம் மொழிப்பெயர்ப்பை படித்திருக்கிறேன் 'ஹைட்ரஜன்' என்பதற்கு 'நீரகம்' என்றும் ஹைட்ரோலிசிஸ் என்பதற்கு மின்பருக்கை என்றும்

*Disinfectant* என்பதற்கு நச்சு நீக்கி என்றும் மொழிபெயர்த்து இருக்கிறார்கள். ஏன் இந்த சொற்கள் பிடிக்கவில்லையா என்று அகராதிகளை எடுத்துக்காட்டி கேட்கிறார்.

இதை எல்லாம் கேட்பவரை தமிழ் அக்கறை இல்லாதவராக, தமிழறிவு இல்லாதவராக, இப்படி எல்லாம் தமிழை உணர்வுபூர்வமாக எடுத்து சொல்லும் பெரியாரை போலி என்று அலட்சியப்படுத்த முயற்சிக்கிறது போலி தமிழ்த் தேசியக் கூட்டம். 1936-ல் சனவரி 13-ஆம் நாள் தமிழ்த் திருநாள் என்று பொங்கல் விழாவை கொண்டாடி இருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரியில் பெரியார், திருவிக, நமச்சிவாய முதலியார் மூன்று பேரும் கலந்து கொண்டுள்ளனர். பெரியார் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

அவரது உரையில் இந்த மேடையில் பல தமிழறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்தித் திணிப்பை பற்றி பேசாமல் அமைதியாக இருக்கிறார்களே ஏதேனும் பயமா? என்று கேள்வி கேட்கிறார். மேடையிலே தமிழறிஞர்களை வைத்து இந்திக்கு எதிராக தமிழ் உணர்வு ஊட்டியவர் பெரியார். இன்னொரு பக்கம் இதே நமச்சிவாய முதலியாருக்கு (போராசிரியர்) 85 ரூபாய் சம்பளமும், சமஸ்கிருத பண்டிதர் குப்புச்சாமி சாஸ்திரிக்கு 300 ரூபாய் சம்பளம் என்ற நிலை இருந்தது.

பெரியார் கேட்டார் தமிழ் சொல்லித் தருபவருக்கு 85 ரூபாய், சமஸ்கிருதம் சொல்லித் தருபவருக்கு 300 ரூபாய் சம்பளம் என்ன நியாயம் என்று கோரிக்கை வைத்தார். உடனே 85 ரூபாய் சம்பளத்தை 300 ஆக்கினார்கள்.

### தமிழ்ப் புலவர்களைப் பெரியார் எப்படி கையாண்டார்?

மறைமலையடிகள் ஒரு கூட்டத்தில் கடவுள் இல்லை என்று சொல்லி உயிரோடு சுற்றிக்கொண்டு இருக்கிறார் ஒருவர் இதை பார்த்துக் கொண்டிருக்கீர்களோ? என்று பேசி இருக்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட பெரியார் முதல் வாரம் பத்திரிகையில் எழுதுகிறார், மறைமலையடிகள் பேசியதாக ஒரு செய்தி வந்தது அதற்கு தகுந்த சமாதானத்தை நான் மறைமலையடிகளிடம் எதிர்பார்க்கிறேன் என்று எழுதியிருந்தார்.

இரண்டாம் வாரம் மீண்டும் மறைமலையடிகள் பேசிய முழுமையான செய்திகளைத் திரட்டி கொண்டு எழுத இருக்கிறேன் அதற்குள் சமாதானம் வருமா.. என்று தெரியவில்லை என எழுதினார். மூன்றாவது வாரம் மறைமலையடிகள் **"நான் அப்படி சொல்லவில்லை அதற்காக வருந்துகிறேன்"** என்று எழுதிக் கி.ஆ.பெ விசுவநாதன் அவர்களிடம் தந்து பெரியாரிடம் கொடுக்கச் சொன்னார்.

கி.ஆ.பெ விசுவநாதன் நீதிக்கட்சி செயலாளராக இருந்தார். உடனே கி.ஆ.பெ விசுவநாதன் மறைமலையடிகள் கொடுத்த செய்தியை திராவிடன் ஏட்டுக்கு கொடுத்தார். திராவிடன் ஏடு தலைப்பு செய்தியாக **"மறைமலையடிகள் மன்னிப்பு"** என்று வெளியிடுகிறார்கள். இதை அறிந்த பெரியாருக்கு கோபம் வந்துவிட்டது.

எவ்வளவு பெரிய தமிழறிஞர் அவர், நான் அவரை எதிர்த்து எழுதவில்லை. எனவே தான் இரண்டுவாரங்களாகஎதிர்ப்பதுபோல் அறிக்கை விட்டேன். மறைமலையடிகள் பெருந்தன்மையாக கடிதத்தை எழுதி இருக்கிறார். ஆனால் என்னுடைய கூட்டுப்பணியாளர்கள் அவசரப்பட்டு போய் வேறு ஒரு பத்திரிகைக்கு கொடுத்து அந்த பத்திரிக்கை மன்னிப்பு என்று தலைப்பில் வெளியிட்டதற்கு நான் நிபந்தனையில்லாமல் (பெரியார்) மன்னிப்பு கேட்கிறேன். என்னுடைய கூட்டுப் பணியாளர்கள் இப்படி நடந்துகொள்வது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது, என்று எழுதி இருக்கிறார்.

***"அறிவுரைக் கொத்து"*** என்ற நூல் கல்லூரிகளில் பாடநூலாக வைக்கப்படுகிறது. அதில் எழுதிய கருத்துக்கள் பார்ப்பனக் கும்பலுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. சமஸ்கிருதம் படித்தால் சீக்கிரம் மோட்சம் கிடைக்கும் என்று எழுதி இருக்கிறார். **எ.கா : 'ஹிருதயம்' இதை தமிழ்ப்படுத்தினால் 'இதயம்' என்று, இப்போது 'நெஞ்சு' என்று சொல்லுகிறார்கள். 'வேகமாக செல்'** என்பதற்கு 'ப்வரிதம்' என்று சமஸ்கிருத சொல்லாடல். தமிழில் அதை விரைவு என்று சொல்லுகிறோம். எப்படி தமிழில் எளிமையாக உச்சரிக்கிறோம். சமஸ்கிருத வார்த்தைகள் அடிவயிற்றில் இருந்து மூச்சை வாங்கிப் பேச வேண்டி இருக்கிறது. ஆகவே இப்படி இருந்தால் நீண்ட காலம் வாழ முடியுமா? சீக்கிரம் மோட்சம் கிடைக்கும் என்று எழுதி இருக்கிறார்.

உடனே பார்ப்பனர்கள் போராட்டம் நடத்தினர். தமிழ்நாடு அரசு " அறிவுரைக் கொத்து" என்ற நூலை பாடநூல் பகுதியில் இருந்து நீக்கியது. பெரியார் போராட்டம் நடத்தினார். எங்கள் தமிழறிஞர் எழுதிய நூலை அரசு எப்படி திரும்பப் பெறலாம் என்ற கோரிக்கை வைத்து தமிழ்நாடு முழுவதும் கூட்டம் நடத்தினார். எதிர்ப்புக்குப் பணிந்து தமிழ்நாடு அரசு அதை மீண்டும் பாட நூலாக மாற்றியது.

பெரியார் சைவம், வைணவம் போன்றவற்றைப் பார்க்கவில்லை. அறிவுக்கு ஒவ்வாத அனைத்தையும் விமர்சனம் செய்தார். பெரியார் கம்பராமாயணத்தை பற்றி விமர்சனங்கள் முன்வைக்கும் போது சைவஅறிஞர்கள் ஆதாரங்களை கொடுத்தார்கள்.

பெரியபுராணம் பற்றி எழுத தொடங்கினேன் ஆட்களை காணவில்லை.. என்றார். பெரியார் கிறுத்துவத்தைப் பற்றி விமர்சனம் எழுதும் போது ஏ.டி பன்னீர் செல்வம் கூட சற்று விலகினார்.

பெரியார் விமர்சனங்கள் முன்வைக்கும் போது யாராக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் எதிர்கொண்டார்.

சரியயெனப்பட்டதை அறிவியல் பார்வையில் அணுகினார். சுயமரியாதைத் திருமணத்தை முதலில் அறிமுகப்படுத்தும் போது பார்ப்பன மறுப்பு தான். புரோகித பகிஷ்கார சங்கம் என்று ஒன்றை வைக்கிறார்கள்.

சுயமரியாதைத் திருமணத்துக்கு ஒன்றுக்கு சென்று வந்து சொல்லுகிறார். பார்ப்பனர்கள் பூநூலை விட மூன்று மடங்கு பெரிதாகவடம் போல் நூல் அணிந்து பார்ப்பனர்களை விட ஐந்து மடங்கு சத்தத்துடன் சமஸ்கிருத மந்திரங்களைச் சொல்லிக் இருந்தார்கள். இதுதான் பார்ப்பன புரோகித பகிஷ்கார என்பது என்று எழுதினார்.

புலவர் மாநாட்டில் ஒரு கேள்வியை முன்வைத்தார். "நீங்கள் எல்லாம் மரபு என்ற ஒன்றை சொல்கின்றீர்கள் சிங்கம் என்றால் கர்ஜிக்கும், யானை என்றால் பிளிறும், ,குதிரை என்றால் கனைக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் பெண்களைப் பற்றி எழுதும் போது மட்டும் மயில் போல் சாயல் உடையாள் என்று சொல்லுகிறீர்களோ, தோகை இருந்தாலே அது ஆண் மயில் அல்லவா? இதை எப்படி பெண்ணோடு ஒப்பிடுகிறீர்களே.. என்று கேட்டார்.

சுயமரியாதை இயக்க மூத்த தலைவர் டி.கே. இராமச்சந்திரன் அவர்களுடைய மகன் திருமணம் திண்டிவனத்தில் நடந்தது. திருமணத்தில் பெரியார், ஐயா முனுசாமி அவர்கள் அளவுக்கு நான் தமிழ் படித்தவன் அல்ல. திருக்குறளில் பெண்ணுக்கு தானே கற்பு பற்றி சொல்லி இருக்கிறார். ஆணுக்கு ஏதாவது கற்பைப் பற்றி பேசி இருக்கிறாரா? என்று பெரியார் கேட்டார் உடனே முனுசாமி இருக்கிறது.

**"பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனொன்றோ ஆன்ற வொழுக்கு** என்றார்.

பெரியார் நானும் படித்தேன் அதில் பிறர் மனைவியை நோக்கக்கூடாது தங்கச்சியை நோக்கலாமா?, கணவன் இல்லாத பெண்ணை நோக்கலாமா? என்று கேள்வி கேட்டார். முனுசாமி தமிழறிஞர் வந்தது வம்பு என்று கடைசி வரை அமைதியாக இருந்தார். ஆழ்ந்து குறள்களை படித்ததால் தான் கேள்வி எழுப்ப முடிகிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் பெரியாரோடு இணைந்தவர்களுக்கு பொருத்தமாகத் தான் வந்து சேர்ந்தவர்களின் நிலை இருந்தது. இந்தி எதிர்ப்புப் போராடத்துக்கு வருகிறார்.

கட்டாயம் இந்தி ஒழிக என்பது தான் முழக்கம். அடுத்து இந்தி ஒழிக என்ற ஆகிறது. தமிழ்ப் புலவர்கள் வந்த பின்னால் இந்தி ஒழிக; தமிழ் வாழ்க என்று உருமாறுகிறது. இப்போது தமிழ் வாழ்க என்று நம் மாநககராட்சி கட்டிடங்களில் வந்து நிற்கிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வந்தவர்களுக்குத் தமிழ் உணர்வு மேலோங்கி இருந்தது அந்த கால கட்டத்தில். சட்ட எரிப்புப் போராட்டத்தின் போது இயக்கத்துக்கு வந்தவர்கள் எல்லாம் ஜாதி எதிர்ப்பில் உறுதியாக இருந்தவர்கள். 80-க்கு பிறகு திராவிடர் கழகத்தில் இணைந்தவர்கள் எல்லாம் ஈழ விடுதலையில் ஆழ்ந்த புரிதலும் உணர்வுகளுடன் இருப்பார்கள். இப்படி இயக்கத்துக்கு வந்தவர்கள் வந்தவுடன் தங்களுடைய தமிழறிவு, ஆற்றல் எல்லாம் இயக்கத்துக்காக பயன்படுத்தி எழுத்தாற்றல் இவற்றை எல்லாம் சேர்த்துக் கொண்டு புதிய முறையில் இயக்கப் பரப்புரை நடக்க உறுதுதுணையாக இருந்தார்கள். **(தொடரும்)**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## “பெரியார் எனும் பெருநெருப்பு” எழுச்சிமிகு கருத்தரங்கங்கள்




**கோபி:** ஈரோடு வடக்கு மாவட்டம் கோபி ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கடந்த 22.02.2025 சனிக்கிழமை மாலை கோபியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு சொந்தமான தியாகசீலர் சி.எஸ்.எஸ் அரங்கத்தில் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது. கருத்தரங்க நிகழ்விற்கு மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் அவர்கள் தலைமையேற்றார். ரூட்ஸ் தமிழ் கரிகாலன், பேரலை இந்திரகுமார் தேரடி, பேரலை மில்டன், அதர்மம் மனோஜ், யூ2 புரூட்டஸ் மைனர் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இறுதியில் மாவட்ட அமைப்பாளர் நிவாஸ் அவர்கள் நன்றியுரை ஆற்றிட அரங்கம் நிறைந்த கோபி பெருமக்களால் கருத்தரங்கம் நிறைவு பெற்றது. நிகழ்வில் கழகத்தோழர்கள், பொதுமக்கள், மாற்று அரசியல் கட்சியினர், இயக்கத்தோழர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**புதுக்கோட்டை: “ஏன் வேண்டும் பெரியார்”** என்ற தலைப்பில் புதுக்கோட்டையில் 23.2.25 அன்று காலை கருத்தரங்கம் நடைபெற்றது. இதில்அதர்மம்யூடுப் சேனல் மனோஜ் விடுதலை புலிகளுக்கு



எதிரான இலங்கை அரசின் செயல் இந்திய அரசின் செயல் இதற்கு காரணமான பார்ப்பனிய அதிகாரிகளின் சூழ்ச்சி ஆகியவற்றையும். சீமான் உளவுத்துறையின் கையால் என்பதையும் படம்பிடித்து காட்டினார்.

ரூட்ஸ் தமிழ் யூடுப் சேனல் கரிகாலன் அவர்கள் போலி தமிழ் தேசியவாதிகளின் அவதூறுகளுக்கு தக்க பதிலடி கொடுத்து பேசினார். இறுதியில் கழக தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் கல்வி வளர்ச்சியில் நூறாண்டுகளுக்குள் ஏற்பட்ட மாற்றமே பெரியார் படிக்க வைத்ததற்கு சாட்சி, யார் தமிழர்கள் என்ற பாவாணரின் கருத்தையும், சாதிதேசியமாக இயங்கும் போலி தமிழ் தேசியவாதிகளையும் அம்பலப்படுத்தும் விதமாகவும், இந்தி திணிப்பை 1930 களின் இறுதியில் எதிர்த்து முதல் இப்போது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து எதிர்ப்பது இன்னும் பலமாக இருக்கிறது என பலற்றை ஆழமாக பேசினார். மேலும் கருத்தரங்கத்தில் தமிழ் வழி கல்வி இயக்கம் தோழர் சின்னப்ப தமிழர், விசிக மா. து. செயலாளர் திலீபன் ராஜா உள்ளிட்ட பலர் கருத்துறை ஆற்றினார். வணிகர் சங்கங்களின் பேரவை புதுக்கோட்டை மாவட்ட தலைவர் தோழர் தரணி ரமேஷ் நிகழ்விற்கு தலைமை ஏற்றும் ஒருங்கிணைத்தும் நிகழ்ச்சி ஏற்பாட்டையும் தமிழ் வழி கல்வி இயக்கத்தோடு இணைந்து செய்திருந்தார்.

## லெனின் சுப்பையா படத்திறப்பு நூல் அறிமுக விழா

பார்ப்பனக் கும்பலை தன் பாடல்களால் தோலுரித்த, விடுதலைக்குரல் இசைப் போர் நிறுவனத்தலைவர் புரட்சிப் பாடகர் லெனின் சுப்பையா படத்திறப்பு மற்றும் நூல் அறிமுக விழா புதுச்சேரி தீனா தோழர் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. பொழிலன், ஏ கே ராஜன், காசு நாகராசன் உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் அவருடன் பயணித்த பல தோழர்கள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

மணிமேகலை, நாத்திகன், தேன்மொழ் பெரியார் பிஞ்சு திராவிட மகிழ்நன் ஆகியோர் சுப்பையாவின் பாடல்களைப் பாடி அவரின் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். உமாபதி சென்னை மாவட்ட செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகமும் லெனின் சுப்பையாவும் இணைந்த பயணித்த நிகழ்வுகளையும், “மோடி என்பது எல்லாம் வெறும் முகமூடி” பாடலை தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரக் கூட்டத்தில் பாடிய களஅனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். காசு நாகராசன் திராவிட இயக்கத் தமிழர் பேரவை அமைப்புச் செயலாளர் விடுதலைப்போர் புத்தகம் வெளியிட்டார். கலந்துக்கொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

## திராவிடம் பெரியார் யாருக்கு எதிரி ? தூத்துக்குடியில் பொதுக்கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட திவிக சார்பில் திராவிடம் - பெரியார் யாருக்கு எதிரி? என்ற தலைப்பில் தூத்துக்குடி தாளமுத்து நகர் முதன்மை சாலையில் 22.02.2025 அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்திறகு தூத்துக்குடி மாவட்ட தி.வி.க. பொருளாளர் கே.சந்திரசேகர் தலைமை வகித்தார் மாவட்ட அமைப்பாளர் பால். அறிவழகன் ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டுதிராவிடர்விடுதலைக்கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், தமிழர் உரிமைக்காக பாடுபட்ட தலைவர் பெரியாரையும் அவதூறு பேசி வருகிறார்கள். பெரியார் மீது குறை சொல்ல முடியாத தற்குறி அரசியல்வாதிகள் அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள். தமிழ்நாட்டு மாணவர்களை பாதிக்கும் ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கை 2020 பற்றி மக்கள் சிந்திக்காமல் இருக்க பெரியார் மீது அவதூறு பரப்புகிறார்கள். பெரியார் மீதான விமர்சனத்திற்கு பதிலளித்தும் உரையாற்றினார்.




நிகழ்வில் திராவிட தமிழர் கட்சி சு.க.சங்கர், கிருத்துவ வாழ்வுரிமை இயக்கம் பணி சுந்தரிமைந்தன், மனித நேய மக்கள் கட்சி அகமது இக்பால் கீழப்பாவூர் சு.அன்பரசு குறும்பலாபேரி மாசிலாமணி, தங்கத்துரை, சுப்பையா பாலசுப்பிரமணியன் தமிழர் முன்னேற்ற கழக நிறுவனத் தலைவர் இ.அர்ச்சுனன் வி.சி.க. வழக்குரைஞர் செந்அர்ஜூன். சமம் குடி மக்கள் இயக்கம் ஜான்.பி.இராயர், பு.இ.மு சுஜித், தமிழர் முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் ச. இராஜா, மனித நேய ஜனநாயக கட்சி M.M.அசன், ஆதித்தமிழர் கட்சி ஊர்காவலன், தி.மு.க. மாணவரணி இள.கார்த்திக், மனித நேயமக்கள் முன்னேற்ற கழகம் முகமது ஜான் ஆகியோர் உரையாற்றினர் திராவிடர் விடுதலைக் கழக தோழர்களும், தோழமை அமைப்பு தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர். சா.த. பிரபாகரன் நன்றியுரையாற்றினார்.

## கோவையில் அமிஷாவுக்கு கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் !




இந்தித் திணிப்பு - புதியக் கல்விக் கொள்கைத் திணிப்பு - வெள்ள நிவாரண நிதி மறுப்பு என தொடர்ந்து தமிழ்நாட்டு நலனுக்கு எதிராகச் செயல்பட்டுவரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டிக்கும் விதமாக 26.02.2025 கோவை ஈஷா யோகா மையத்திற்கு வருகைதந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா-வுக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டம் 26.02.2025 மாலை 5 மணியளவில் ஹோப் காலேஜ் சிக்னல் அருகில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன், அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, சிபிஐ (மா.லெ) ரெட் ஸ்டார் மத்தியக்குழு உறுப்பினர் இனியவன், தமிழ்ப் புலிகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் இராமச்சந்திரன் கண்டன உரையாற்றினர்.

திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்ப் புலிகள் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மா.லெ) ரெட் ஸ்டார் அமைப்புகளைச் சேர்ந்த 135 பேர் கலந்து கொண்டனர். 109 பேர் கைதாகினர். மேலும் கழக மாவட்டங்களான கோவை, சேலம் கிழக்கு - மேற்கு, ஈரோடு வடக்கு - தெற்கு, நாமக்கல், பொள்ளாச்சி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு அமித்ஷா-வுக்கு எதிராகக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS
Under WPP

Posted : March 08, 2025

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு சந்தா :ரூ.300/- ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/**

**பேச:+916369776351. பெரியார் முழக்க 2024**

**சந்தாதாரர்களுக்கு வருகிற மார்ச்-31 2025 வரை இதழ்கள் அனுப்பப்படும். 2025 ஆண்டு இதழுக்கான சந்தா மற்றும் முகவரியை மார்ச் இறுதிக்குள் அனுப்புங்கள்.**

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran